# பாரத சாரண சாரணியர் – தமிழ்நாடு

**மாநிலத் தலைமையகம், வென்லாக் பூங்கா – திருவல்லிக்கேணி, சென்னை – 5**

தமிழ்நாடு மாநில பாரத சாரண சாரணியர் மாநில செயலர் அவர்களின் செயல்முறைகள்.
ந.க.எண்:நிர்வாகம்:BSG/RP/001/2018 –19 நாள்:07.01.2019.
முன்னிலை: P.A. நரேஷ், மாநில செயலர் மற்றும் கூடுதல் உறுப்பினர், ஆசிரியர் தேர்வு வாரியம்.

பெறுநர்:
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

ஐயா/அம்மா,

பொருள்: தமிழ்நாடு மாநில பாரத சாரண, சாரணிய ஆசிரியர்கள் மற்றும் சாரண இயக்கத்தின் வளர்ச்சிக்கு உதவியாக இருப்பவர்கள் மற்றும் ஆதரவாளர்கள் மாநில அளவிலான 2017-18 ஆண்டுக்கான விருதுகள் வழங்குதல் – வருவாய் மாவட்ட அளவில் தகுதி வாய்ந்தவர்கள் பெயர் பட்டியல் – தேர்வு செய்து அனுப்புதல் – திருத்தப்பட்ட விதிமுறைகள் தெரிவித்தல் - சார்பு.

1. தமிழ்நாடு மாநில பாரத சாரண சாரணிய இயக்கத்தில் சிறப்பாக பணியாற்றி வரும் சாரண சாரணிய ஆசிரியர்கள் மற்றும் இயக்கத்திற்காக சிறப்பாக சேவை செய்பவர்களை உற்சாகப்படுத்தவும், இயக்கத்திற்கு மேலும் வலுவூட்டவும் கீழ்க்கண்ட பிரிவுகளில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

1. நீண்ட கால சேவை விருது (Long Service Decoration) (பதிவு செய்யப்பட்ட சாரண சாரணிய படையில் குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் பணி புரிந்து இருக்கவேண்டும்)
2. சிறப்பு சேவை நட்சத்திரம் (Special Service Star)
3. நன்றி பதக்கம் (Thanks Badge (Non Scout)
4. தகுதிக்கான பதக்கம் (Medal of Merit)
5. தகுதிக்கான பதக்கத்திற்கு பொருந்தும் விருது (Bar to Medal of Merit)

2. விருதுகள் பெறுவதற்கான தகுதி வாய்ந்தவர்களை தேர்வு செய்ய, இது குறித்த விவரங்களை அனைவருக்கும் தெரியப்படுத்தி தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரி பெறப்பட வேண்டும். அவ்வாறு கோரி பெறப்பட்ட விண்ணப்பங்களை ஆய்வு செய்ய மாவட்ட முதன்மை கல்வி அலுவலர், தலைமையில் கல்வி மாவட்ட முதன்மை ஆணையர் மற்றும் கல்வி மாவட்ட செயலர் (Office Bearers) அடங்கிய குழு அமைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு பிரிவிற்கும் பரிந்துரை செய்பவர்களின் கருத்துருக்கள் பெறப்பட்ட பிறகு பாரத சாரண சாரணிய நோக்கங்கள், கொள்கைகள் விதிகளின் படி (APRO) பரிசிலனை செய்து விருதிற்காக பரிந்துரைக்கப்பட வேண்டும்.

3. கல்வி மாவட்ட அளவில் குறைந்த பட்சம் 10 ஆண்டுகள் பள்ளிகளில்/மாவட்டங்களில் சாரண பணியாற்றி செயல்படுபவர்கள் நீண்ட கால சேவை விருதிற்கு தகுதியுடைவர்களாக கருதப்படுவர். ஒரு கல்வி மாவட்டத்தில் இத்தகைய தகுதி உடையவர்கள் எத்தனை பேர் இருந்தாலும் அவர்களிடம் விண்ணப்பங்களைப் பெற்று விருதிற்கு பரிந்துரை செய்யலாம்.

4. மாவட்ட அளவில் மேற்கண்ட நீண்ட கால சேவை விருது தவிர வ.எண் 2 முதல் 5 வரையுள்ள பிரிவுகளுக்கான விண்ணப்பங்களைப் பெற்று அவற்றைப் பரிசிலனை செய்து தலா ஒன்று வீதம் மொத்தம் 4 நபர்களில் குறைந்தபட்சம் இருவர் பெண் பிரதிநிதிகளாக இருக்க வேண்டும். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் தலைமையில் தேர்வு குழு கூட்டம் நடத்தப்பட்டு விருதுக்குரியவர்களை தேர்வுசெய்து அனுப்பட வேண்டும்.

5. பூர்த்தி செய்யப்பட்ட விருதிற்கான விண்ணப்பங்கள் உரிய தகுதி சான்றிதழ்களின் நகல்களுடன் மாநில செயலரின் பெயரிட்ட முகவரிக்கு மந்தனமாக அனுப்பப்படவேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை 21.01.2019 க்குள் மாநில தலைமையகத்திற்கு அனுப்பிவைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.